بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 02-03-2012

## *DAWADHEIJLAH - A CALL TOWARDS ALLAH*

## தாவத்தேஇல்லாஹ் - அல்லாஹ்வின்பால் அழைப்பு

### *Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)*

உலகெங்குமுள்ள தனது தோழர்களுக்கும் மற்றனைத்து முஸ்லீம்களுக்கும் சமாதான வாழ்த்துக்கள் அறிவித்த பிறகு, கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் தஷஹ்ஹீத், தஅவ்வுசு மற்றும் சூராஃபாத்திஹாவும் ஓதி இவ்வாறு கூறினார்.

எனது பிரியமான சகோதர சகோதரிகளே அல்லாஹ்வின் அருளால் **''தஅவ''**யுமாக தொடர்புடைய விஷயத்தைக் குறித்து தொடர்ந்து உரையாற்றுவதற்கு எனது நாதன் மற்றொரு வாய்ப்பு தந்திருக்கின்றான். **அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கு.**

நமது மற்று முஸ்லீம் சகோதரர்களுக்கு எதிராக பொறாமையும், பகையும், சந்தேகவும் மனதில் வைத்துக் கொள்வதில் இருந்து நாம் நிச்சயமாக விலகிக்கொள்ள வேண்டும். இது நமக்கு தவிர்த்துக்கொள்ள இயலாத ஒரு விஷயமாகும். ஒரு தேவை வரும்போது ஒன்றுக்கொன்று கைவிட்டிடாமல் இருக்க வேண்டும். முஸ்லீம் சகோதரர்களிடத்திலும் பொதுவாகவும் வெறுப்பும் பகைமையும் தோற்றுவிக்க முயற்சிக்கின்ற சாத்தானின் பிடியில் இருந்து விலகிக்கொள்வதற்காகவே திரு நபி(ஸ) அவர்கள் இவ்வாறு கூறியிருக்கின்றார். **''ஒன்றுக்கொன்று வெறுத்துக் கொள்ளவோ பொறாமை வைத்து கொள்ளவோ கைவிட்டுக் கொள்ளவோ கூடாது. ஒரு முஸ்லீம் சகோதரனை பகைத்து கூறுவதற்கோ, மூன்று இரவும் பகலும் அவனோடு பேசாமல் இருப்பதற்கோ அனுமதியில்லை''.**

**''தாஇ-இலல்லாஹ்''** (அல்லாஹ்வின்பால் அழைக்கின்றவர்கள்) என்ற நிலையில் நாம் நமது சகோதரர்களிடத்தில் இரக்கவும், கருணையும் காட்டுவதற்கு கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். தனது சகோதரர்களாகிய மனித குலத்தோடு முழுவதும் கருணையும் இரக்கவும் காட்டிக்கொள்ள வேண்டும். ஏனையவர்களோடு கருணை காட்டிக்கொள்வதன் முக்கியத்துவத்தை கற்பிப்பதற்கு அறிவுரைகள் வழங்கிய திரு தூதரின் நடைமுறையும் அதுவேயாகும். நாம் எப்போதும் இரக்கவும், கருணையும் உள்ளவர்களாகயிருக்க வேண்டும் என்ற திரு நபி(ஸ) வின் உபதேசத்தில் இருந்து நாம் புரிந்துக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் தஅவா செய்வது நமக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இஸ்லாமிக போதனைகளை பரிபூரணமாக பின்பற்றிக்கொள்ளாத முஸ்லீம்களையும், இஸ்லாமிக நம்பிக்கையாளராக மாறியதினால் நம்மை துன்புறுத்தவோ நமது மனைகளில் இருந்து நம்மை வெளியேற்றிக் கொள்ளவோ செய்யாத அம்முஸ்லீம்களையும், இஸ்லாமின்பால் அழைக்கின்ற போதும் இஸ்லாமிக போதனைகளை அவர்களுக்கு எட்டவைக்கின்ற போதும் மேல்கூறிய இரண்டு சிறப்பான குணங்களும் நம்மிடம் பிரகடனப்பட வேண்டும்.

உண்மையில் அம்முஸ்லீம் மக்களோடு பரிமாறிக்கொள்வது நீதியுடனும் இரக்கத்துடனும் ஆகவேண்டும் என்று அல்லாஹ் நம்மிடத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளான். அனைத்து மக்களையும் இஸ்லாத்தின்பால் அழைத்துக்கொள்வதன் வழியாக நமக்கு அவர்களிடம் நமக்குள் குடிகொள்ளும் இரக்கத்தையும் கருணையையும் பிரகடனப்படுத்திக் கொள்ள முடிந்து விடும். உண்மையை பகுத்தறிந்து கொண்ட பிறகும் அதை நிராகரித்து கொள்ளவும் அதற்கேற்ப நடந்துக் கொள்ள மறுத்துவிடவும் செய்வோர்களுக்கு கிடைக்கின்ற கடினமான நரகத்தண்டனை நடபடிகைகளைக் குறித்தும் நாம் அவர்களை புரியவைக்க வேண்டும்.

அல்லாஹ்வின் பால் அழைக்கின்றவர்கள் என்ற நிலையில் நாம் இஸ்லாமின் போதனைகளை குறித்து நன்றாக உணர்ந்துக் கொண்டோர்கள் ஆகவேண்டும். திருகுர்ஆனுடையவும், திருசுன்னத்தினுடையவும் ஞானங்களை கைவசப்படுத்திக்கொள்ள எப்பொழுதும் விருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும். இது நமக்கு தவிர்த்துக் கொள்ள இயலாத விஷயமேயாகும். காரணம் திரு நபி(ஸ) அவர்கள் ஞானம் கைவசப்படுத்திக் கொள்வதின் தேவையைக் குறித்து நம்மை ஞாபகப்படுத்தியுள்ளார். திருநபி(ஸ) அவர்கள் கூறியிருக்கின்றார் **''ஒரு நம்பிக்கையாளர் தனக்கு கிடைத்த அறிவை கொண்டு மட்டும் திருப்தி அடையாமல் தனது மரணம் வரையிலும் மேலும் மேலும் அறிவு கைவசப்படுத்திக் கொள்கின்றவனாக இருக்க வேண்டும்''.** (திர்மிதி)

இஸ்லாமைக் குறித்து ஆழமாகப்படித்து அறிவுகள் கைவசப்படுத்திக் கொள்வதே நமது கடமை. திருகுர் ஆனையும், திருசுன்னத்தையும் குறித்து புரிந்துக் கொள்வதற்கு முஸ்லீம்கள் உட்பட அனைத்து மக்களையும் நீங்கள் அழைத்துக் கொள்ள வேண்டும். இஸ்லாமைக் குறித்து அதன் உண்மையான ஊற்றில் நின்று படித்துக் கொள்ள வேண்டும் என்பது அவர்களின் நன்மைக்காக வேண்டியே ஆகும். இஸ்லாமை குற்றப்படுத்துகின்ற கட்டுரைகளும் மற்றும் எழுதுவதில் இருந்து அவர்களை அகற்றிகொள்ள இது வழிவகுக்கும். இம்மையிலும் மறுமையிலும் வெற்றியை எட்டிவிட, அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்றவார் அறிவுகள் கைவசப்படுத்த வேண்டும். அந்த அறிவுகள் தஅவா செய்வதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் இஸ்லாமிற்காக செய்யும் இந்த உள்ளபூரணமான சேவைகள் காரணம் அல்லாஹ் நம்மிடத்தில் திருப்தியடைந்துவிடவும் அவனது நேசம் கிடைத்திடவும் செய்கின்றது. இந்த அறிவுகள் மற்றேதேனும் சுய விருப்பத்திற்காக பயன்படுத்திட கூடாது.

**''தாஇ இலல்லாஹ்''** என்ற நிலையில் நாம் வளர்த்திக்கொள்ள வேண்டிய மற்றொரு தன்மை உண்மையும், திடவுமான இஸ்லாமிக போதனைகளின் பின்பலத்தால் மக்களை அல்லாஹ்வின்பால் அழைத்து கொள்ள வேண்டும் என்பதாகும். இதற்காக இஸ்லாமையும் திரு சுன்னத்தையும் குறித்து மிக ஆழமாக கற்றுக்கொள்ள வேண்டும். அதுவழியாக உண்மையை மற்றவர்களிடத்தில் சரியான நிலையில் எட்ட வைப்பதற்கு நமக்கு முடிந்திட வேண்டும். ஞானத்தின் திடமான ஒரு ஊற்று கைவசம் இருந்ததினாலாகும் திரு நபி(ஸ) அவர்கள் உண்மையை ஏனையவர்கள் மத்தியில் வெற்றிகரமாக எட்ட செய்தது.

திரு குர்ஆன் கூறுகின்றது.

**“நீர் கூறுவீராக இதுவே எனது வழி. நான் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். நானும் என்னை பின்பற்றியோரும் தெளிவான ஞானத்தில் இருக்கின்றோம். மேலும் அல்லாஹ் தூய்மையானவன். நான் இறைவனுக்கு இணைவைப்போர்களை சார்ந்தவனல்லன்.”** (12-109)

தனக்கு முன் தோன்றிய நபிமார்களையும் இறைதூதர்களையும் போன்று திரு நபி (ஸ) அவர்களும் மக்களை அல்லாஹ்வின் ஏகத்துவத்தின்பால் அழைத்தார். திருமறை கூறுகின்றது. **“நீர் கூறுவீராக...மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லோருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள் பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்குரியது. அவனையன்றி வணக்கத்திற்குரியது எதுவுமில்லை. அவன் உயிரை வழங்கவும் மரணத்தை அளிக்கவும் செய்கின்றான். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்விடத்தும் அவனது வசனங்களிடத்தும் நம்பிக்கை கொண்டுள்ள எழுத்தறிவற்ற நபியாகிய அவனுடைய தூதரிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அவரையே பின்பற்றுங்கள்”** (7:159)

**“நீர் கூறுவீராக, நான் உங்களைப் போன்று ஒரு மனிதனே. ஆனால் உங்களுடைய உண்மையான இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹியின்மூலம் அறிவிக்கப்படுகிறது. இதுதான் நமக்கு இடையிலுள்ள வேற்றுமை. ஆகவே எவர்தான் இறைவனை சந்திக்க விரும்புகிறாரோ அவர் நற்செயல்களை செய்து தன் இறைவனுக்கு வேறு எவரையும் இணையாக ஆக்க வேண்டாம்”** (18-111).

**“அருளற்ற அருளாளனும் மேலும் மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால், நீர் கூறுவீராக. அல்லாஹ் ஒருவனே ஆவான். அல்லாஹ் எந்த தேவையும் அற்றவன். அவன் எவரையும் பெறவில்லை. அவன் எவராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு இணை எவரும் இல்லை”** (112:1-5).

மேல்கூறியது மூன்று வகைப்பட்ட தௌஹீதுகளைப் பற்றியதாகும். நாம் அம்முஸ்லீம்களை அல்லாஹ்வின் பால் அழைக்கின்ற வேளைகளில் விளக்கமாக கூறவேண்டியது. அதில் முதலாவதான தௌஹீது - **“அல்றுப்பூபியத்”** ஆகும். அது சுட்டிக்காட்டுவது அல்லாஹ்வின் திவ்வியத்துவத்தின் ஏகத்துவத்தையாகும். அல்லாஹ் ஒரெயொரு **“றப்பாகும்”**. அதாவது, நாம் காண்கின்ற பிரபஞ்சத்தை அனைத்தும் படைத்து, அதன் செயல் ஏற்பாடுகளை உறுதியாக பேணி, மனித குலத்தை அவர்களின் எல்லா வகையிலுமான நிலைநிற்புக்கும் தேவையான ஒவ்வொன்றும் தேவைப்பட்ட நேரங்களில் மற்றெவருடையவும் விண்ணப்பமோ கட்டளையோ கூடாமல் சுயமாக அறிந்து வழங்குகின்ற எல்லாவல்லவனும் எல்லாத்திற்கும் அதிபனுமான அல்லாஹ்.

இரண்டாவது தௌஹீது - **“அல் உலூஹியத்து”** ஆகும். இது குறிப்பிடுவது வணக்கத்திற்குரியது ஒரேயொருவனான அல்லாஹ் மட்டும் என்பதையாகும். அவனை மட்டும்

வணங்குவதற்காக மனிதனையும் ஜின்னுகளையும் படைத்தது அவனே ஆவான். அல்லாஹ்வல்லாமல் மற்றெவரும் வணக்கத்துக்குரியவனில்லை. அல்லாஹ்வின் சட்டங்களுக்கு ஏற்றவார் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் இறைவணக்கத்தின் வருதியில் வரும். ஆனால் அந்த ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் அன்பை நாடிக்கொண்டே இருக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

மூன்றாவது தௌஹீது **"அல்அஸ்மாவஸ்ஸிபத்"** ஆகும். இது சுட்டிக்காட்டுவது திருகுர்ஆனிலும் திரு ஹதீஸிலும் காண்கின்ற ஒளிமயமான பெயர்களுக்கும் சிறந்த தன்மைக்கும் உரியவன் அல்லாஹ் மட்டுமே என்ற உண்மையின்பால் ஆகும். அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கு மட்டுமே. அவனது அழகான பெயர்களும் சிறந்த தன்மைகளும் ஏற்ற மற்றெவரும் இல்லை. இஸ்லாமின் தௌஹீதின்பால் உள்ள நம்பிக்கையைக் குறித்து ஆழமாக சிந்திக்கின்ற எவர் ஒருவரைப் பொறுத்தவரையிலும் முற்றிலும் அது இயற்கைக்கு ஏற்ற கருத்து என்பதை உணரமுடியும். ஏனெனில் அதன் காரணம் மிக எளிதில் புரிந்துக் கொள்ள முடியும். இந்த பிரபஞ்சத்தில் இரண்டோ அல்லது அதற்கு அதிகமானதோ ஆன இறைவர்கள் இருந்திருப்பின் அதிகாரத்திற்காக போராடியும் போட்டி போட்டும் இறைவர்கள் செய்கின்ற குழப்பங்களால் இந்த பிரபஞ்சம் எப்போதும் இருள் மூடியிருந்திருக்கும், நாசமடைந்திருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்

**"ஆகாய பூமியில் அல்லாஹ்வினை தவிர்த்து மற்று இறைவன் இருந்திருப்பான். அது இரண்டும் நாசமடைந்து போயிருக்கும். அதனால் சிம்மாசனதின் நாதனான அல்லாஹ் அவர்கள் விளக்கமளிப்பதில் இருந்து தூய்மையானவன் ஆவான்".** அதனால் அம்முஸ்லீம் மக்களை அல்லாஹ்வின்பால் அழைக்கின்ற வேளைகளில் அவர்களுக்கு விளக்கமாக கூறி புரியவைக்கவேண்டிய உண்மை இவ்வாறாகும். அதாவது அவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் பால் உறுதியாகவும் திடமாகவும் நம்பிக்கொள்ளவில்லையென்றால் அல்லாஹ் உங்களுக்கு மார்க்க வழிகாட்டமாட்டான். அவனது ஏகத்துவத்தின்பால் திடமான நம்பிக்கை கொள்ளாமல், அவனுக்கு இணைவைப்போர்களிடம் சேர்ந்துவிடவோ, அவனுக்கு பங்காளிகளை வைக்கவோ செய்கின்றதானால் அவர்களின் நல்ல செயல்கள்கூட பலனற்றவையாக மாறிவிடும்.

அல்லாஹ் அவனது திருமறையில் 6-ம் அதிகாரத்தில் 89-ம் வசனத்தில் தெரிவிக்கின்றான். இஸ்லாமின் பால் உள்ள அழைப்பை ஏற்றுக்கொண்டு, பாவமன்னிப்பு கூறி அவன்பால் திரும்பிக் கொள்ளவும் செய்வது அவர்களின் மோட்ஷத்திற்காகவே தான். அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைப்பதில் இருந்து பின்திரும்பி கொள்ள வேண்டும். அவனுக்கு இணைவைக்கின்றதினை தவிர்த்துள்ள எல்லா தவறுகளுக்கும் அவனிடத்தில் மன்னிப்பு கிடைக்கும். அல்லாஹ் கூறுகின்றான் **"நிச்சயமாக அல்லாஹ்விடம் மற்றெதனையும் பங்கு சேர்ப்பதை அவன் மன்னிக்கமாட்டான். அதை தவிர்த்துள்ளதினை அவன் நாடுகின்றோர்களுக்கு மன்னிப்பு அளிப்பான். ஏதொருவன் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றானோ நிச்சயமக அந்நபர் செய்வது கடினமான பாவமேயாகும்".**

உண்மையை தேடிக்கொள்வதற்காக தூண்டசெய்கின்ற எல்லா சந்தர்ப்பங்களையும் நாம் நன்றாக பயன்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் **கலாமையும்**, அவனது தூதனின் ஹதீஸ்களையும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது(அ)முடையவும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளருடையவும் நூல்களை நன்றாக படித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அது அம்முஸ்லீம் மக்களிடத்தில் இஸ்லாமின் மகத்துவத்தையும் அதன் உண்மையையும் புரியவைப்பதற்கு உதவியளிக்கின்ற துணைப்பொருள்கள் ஆகும். முஸ்லீம்களுக்கும் அம்முஸ்லீம்களுக்கும் உண்மையை தேடிக்கொள்வதன் தேவையைக் குறித்து உணரச் செய்ய வேண்டும் என்பது நமக்கு தவிர்த்துக்கொள்ள முடியாத ஒன்றாகும். நாம் அவர்களிடத்தில் கூறிக்கொள்ள போகின்றது திருகுர்ஆனையும், திருசுன்னத்தையும் குறித்தாகும் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளவேண்டும்.

திருகுர்ஆன் அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்ட தூய வெளிப்பாடுகள் என்பதையும் திருநபி(ஸ)வின் நடைமுறையை பின்பற்றிக்கொள்ள வேண்டியதின் தேவை என்ன என்பதையும் நாம் அவர்களுக்கு விளக்கிக் கொடுத்திட வேண்டும். மானிடகுலத்திற்கு உத்தமமான வழியை திருகுர்ஆனும், திருசுன்னத்தும், திருஹதீஸும் வழங்குகின்றது என்ற உண்மையை அவர்கள் பகுத்தறிந்திட வேண்டும். திருகுர்ஆனின் தூயவெளிப்பாடுகளில் சில பகுதிகளில் நாம் சந்தேகம் கொள்வதேயானால், நாம் உண்மையான நம்பிக்கையாளரேயல்ல. அதன் ஏதாவது ஒரு பகுதியை நாம் நிராகரித்துக்கொண்டால் அதற்கு தண்டனை மறுமையில் நமக்கு கிடைத்துவிடும். அல்லாஹ் நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றான்.

**“நீங்கள் வேதத்தின் ஒரு பகுதியில் நம்பிக்கை வைத்து மற்றொரு பகுதியை மறுக்கின்றீர்களா”** (2-86)

அம்முஸ்லீம்களை அல்லாஹ்வின்பால் அழைத்துக்கொள்ளும் போது நாம் அவர்களிடம் விளக்க வேண்டிய ஒரு உண்மை என்பது, மானிடகுலத்திற்கு அனைத்தும் மார்க்கவழிகாட்டியாக உதவிபுரிகின்ற ஒரெயொரு பரிபூரணவேதம் திருகுர்ஆன் மட்டும் ஆகும் நம்மை படைத்த அல்லாஹ் அந்த வேதத்தினை இறக்கி அருள் செய்தது மற்று மதங்களின் மீது இதுவே உண்மை மதவும் உண்மை வழியுமாக நிலைநிற்க வேண்டும் என்பதற்கேயாகும்.

**“தாஆவா”**யுமாக தொடர்புடைய இன்றைய விஷயத்தை நான் இங்கு நிறைவுபடுத்துகின்றேன். வருகின்ற வெள்ளிக்கிழமையும் இதே விஷயத்தைக்குறித்து உங்களிடம் பேசிக்கொள்வதற்கான அறிவும் ஆற்றலும் அல்லாஹ் எனக்கு வழங்குவானாக. இன்ஷா அல்லாஹ்.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**